

முன்னாள் முதல்வர் எம்.ஜி.ஆர். அவர்களின் 108வது பிறந்த நாளையொட்டி நேற்று (17.01.2025) தமிழ்நாடு அரசின் சார்பில் சென்னை, கிண்டி, தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக்கழக வளாகத்தில் அமைந்துள்ள அன்னாரது திருவுருவச் சிலைக்கு அருகில் அலங்கரித்து வைக்கப்பட்டுள்ள திருவுருவப்படத்திற்கு கு சட்டத் துறை அமைச்சர் எஸ். இரகுபதி, குறு, சிறு மற்றும்நடுத்தரதொழில்நிறுவனங்கள்துறை அமைச்சர் தா.மோ. அன்பரசன், இந்துசமயம்மற்றும்அறநிலையத்துறைஅமைச்சர் பி.கே. சேகர்பாபு, எஸ்.எம்.நாசர், பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர்.பிரியா, துணை மேயர் மு.மகேஷ் குமார், தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக்கழக துணை வேந்தர் பேராசிரியர் மரு. கே.நாராயணசாமி, தமிழ் வளர்ச்சி மற்றும்செய்தித்துறை செயலாளர் வே.ராஜாராமன், செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் மரு. இரா. வைத்திநாதன், செய்தி மக்கள் தொடர்புத்துறை கூடுதல் இயக்குநர்கள் மு.பா.அன்புச்சோழன் (மக்கள் தொடர்பு), ச.செல்வராஜ் (செய்தி) மற்றும் அரசு உயர் அலுவலர்கள் ஆகியோர் மலர் தூவி மரியாதை செலுத்தினார்கள்.

### திருப்பத்தூர் – சிறாவயலில்

# புகழ்பெற்ற மஞ்சுவிரட்டு நிகழ்ச்சியில் சீறிப்பாய்ந்த காளைகள்!

### அமைச்சர் கே.ஆர். பெரியகருப்பன் துவக்கி வைத்தார்!

சிவகங்கை, ஜன. 18-

சிவகங்கை மாவட்டம் திருப்பத்தூர் அருகே சிறாவயல் கிராமத்தில் ஒவ்வொரு ஆண்டும் தை மாதம்3ஆம் தேதி மஞ்சுவிரட்டு 300, ஆண்டுகளுக்கு மேலாக நடைபெற்றுவருகிறது. இந்த ஆண்டு (நேற்று) தைமாதம் 3ஆம்தேதி காலையில் மஞ்சுவிரட்டு நடைபெற்றது. முன்னதாக. கூட்டுறவுத்துறை அமைச்சர் கே.ஆர். பெரியகருப்பன் கொடியசைத்து மஞ்சுவிரட்டினை துவக்கி வைத்தார். அமைச்சர் கொடிஅசைத்ததும் வாடிவாசலிலிருந்து மாடுகள் சீறிப்பாய்ந்து மைதானத்தில் விளையாடின.ஏராளமான மாடுபிடி வீரர்கள் மாட்டைப் பிடித்தனர். ஆனால் சில மாடுகளை மாடுபிடி வீரர்களால் பிடிக்க முடியவில்லை.

இந்த நிகழ்ச்சிக்கு மாவட்ட ஆட்சியர் திருமதி ஆஷா அஜித் தலைமை தாங்கினார் .இந்த நிகழ்ச்சியில் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ஆஷிஸ்சட்டர்ஜி, மாவட்ட வருவாய் அலுவலர் மரு.செல்வசுரபி,எஸ். மாங்குடி எம்.எல்.ஏ. சிறாவயல் கிராம அம்பலகாரர் வேலுச்சாமி அம்பலம் கல்லல் கிழக்கு ஒன்றிய செயலாளர் குன்னக்குடி சுப்பிரமணியன் மற்றும் கால்நடைத்துறை , வருவாய்த்துறை அதிகாரிகள்சுற்றுப்புற கிராமமக்கள் உட்பட 1லட்சத்திற்கும் மேற்பட்ட பொதுமக்கள் கலந்து கொண்டார்கள். 240,மாடுகள்190மாடு பிடி வீரர்களும் கலந்து கொண்டனர் . அமைச்சர் கே ஆர். பெரியகருப்பன் கார்த்தி ப.சிதம்பரம் எம்.பி.மற்றும் சிறாவயல் கிராமத்தின் சார்பாக சைக்கிள், சில்வர்பாத்திரம்,குக்கர், பட்டுபுடவைகள்,பீரோ போன்ற பரிசுப் பொருட்கள் வழங்கப்பட்டது சிவகங்கை, மதுரை, மேலூர் ,திருமயம் ,புதுக்கோட்டை, தஞ்சாவூர் ,தேனி, ராமநாதபுரம் உட்பட தென் மாவட்டத்திலிருந்து 240 மாடுகளும் 190 மாடு பிடி வீரர்களும் கலந்து கொண்டனர். மஞ்சுவிரட்டினை முன்னிட்டு 1000த்திற்கும் மேற்பட்ட போலிசார் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டிருந்தார்கள்.

---

### 100 பத்திரப் பதிவு அலுவலகங்களில்

# 18 ஆம் தேதி முன்பதிவு செய்ய கூடுதல் வில்லைகள்!

### பத்திரப்பதிவு துறை அறிவிப்பு

சென்னை, ஜன.18-

18.01.2025 அன்று ஒரு நாள் மட்டும் 100 சார்பதிவாளர் அலுவலங்களுக்கு செயல்டுவதிலிருந்து விலக்கு அளித்து விடுமுறையும், 20.01.2025 அன்று பொதுமக்கள் பயன்பெறும் வகையில் அனைத்து சார்பதிவாளர் அலுவலகங்களிலும் கூடுதல் முன்பதிவு வில்லைகள் ஒதுக்கீடு செய்தும் அறிவிக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு அரசு பொது மக்கள் மற்றும் அரசு பணியாளர்கள் பொங்கல் பண்டிகையினை தங்களுடைய குடும்பத்துடன் கொண்டாடும் விதமாக 14.01.2025 முதல் 16.01.2025 வரை தொடர் அரசு விடுமுறை உள்ள நிலையில், பொதுமக்கள் மற்றும் அரசு பணியாளர்களின் 17.01.2025 அன்று வெள்ளிக்கிழமை விடுமுறை அளிக்க கோரிக்கை பெறப்பட்டதின் அடிப்படையில் அக்கோரிக்கைகளை ஏற்று, முதல்மைச்சர் அவர்கள் மாணவர்கள், அவர்தம் பெற்றோர்கள், ஆசிரியர்கள் மற்றும் அரசு பணியாளர்கள் தங்களது சொந்த ஊர் சென்று பொங்கல் பண்டிகையை கொண்டாடும் வகையில், 17.1.2025 (வெள்ளிக்கிழமை) அன்று தமிழ்நாடு முழுவதும் உள்ள அரசு அலுவலங்கள், பொதுத் துறை நிறுவனங்கள், பள்ளிகள், கல்லூரிகள் மற்றும் அனைத்து கல்வி நிறுவனங்களுக்கும் உள்ளூர் விடுமுறை அளித்தும், அவ்விடுமுறையினை ஈடு செய்யும் வகையில் 25.01.2025 (சனிக்கிழமை) அன்று பணி நாளாக அறிவித்தும் உத்திர விட்பட்டுள்ளது.

எனவே, மேலே குறிப்பிட்டுள்ளபடி 17.01.2025 வரை தொடர் விடுமுறை உள்ள நிலையில் அதன்பின் வரும் 18.01.2025 அன்று சனிக்கிழமையில் செயல்படும் 100 சார்பதிவாளர் அலுவலங்களுக்கு 18.1.2025 அன்று ஒருநாள் மட்டும் செயல்படுவதிலிருந்து விலக்கு அளித்து விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், தை மாதத்தின் முதல் வேலை நாளான 20.01.2025 அன்று சுப முகூர்த்த தினமாக உள்ளதால், அன்று அதிகளவில் ஆவணப்பதிவுகள் நடைபெறும் என்பதால் கூடுதலாக முன்பதிவு வில்லைகள் ஒதுக்கீடு செய்யுமாறு பொதுமக்களிடமிருந்து கோரிக்கைகள் பெறப்பட்டுள்ளன. இதனை ஏற்று, 20.01.2025 அன்று ஒரு சார்பதிவாளர் உள்ள அலுவலகங்களுக்கு 100க்கு பதிலாக 150 முன்பதிவு வில்லைகளும், இரண்டு சார்பதிவாளர்கள் உள்ள அலுவலகங்களுக்கு 200க்கு பதிலாக 300 முன்பதிவு வில்லைகளும், அதிகளவில் ஆவணப்பதிவுகள் நடைபெறும் 100 அலுவலகங்களுக்கு 100க்கு பதிலாக 150 சாதாரன முன்பதிவு வில்லைகளோடு ஏற்கனவே வழங்கப்படும் 12 தட்கல் முன்பதிவு வில்லைகளோடு கூடுதலாக 4 தட்கல் முன்பதிவு வில்லைகளும் பொதுமக்களின் பயன்பாட்டிற்காக வழங்கிட உத்தரவிடப்பட்டுள்ளது.

---

# திண்டுக்கல் மாவட்டம் - ரெட்டியார் சத்திரத்தில் மாபெரும் கிரிக்கெட் போட்டிகள்!

### மாவட்டச் செயலாளர் – ஐ.பி. செந்தில்குமார் எம்.எல்.ஏ. பரிசுகள் வழங்கினார்!

திண்டுக்கல், ஜன.18-

திண்டுக்கல் மாவட்டம் முழுவதும் தி.மு.க.வினர் கட்சியின் பவள விழா மற்றும் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பிறந்த நாள் விழா மற்றும் ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் ஐ.பெரியசாமி ஆகியோரின் பிறந்த நாளை சிறப்பாக கொண்டாடி வருகின்றனர்.

திண்டுக்கல் கிழக்கு மாவட்ட இளைஞரணி மற்றும் ரெட்டியார்சத்திரம் வடக்கு ஒன்றியம் தி.மு.க. சார்பாக முப்பெரும் விழாவையொட்டி மாபெரும் கிரிக்கெட் போட்டிகள் நடைபெற்றது. இதில் திண்டுக்கல் மாவட்டம் முழுவதில் இருந்தும் கிரிக்கெட் விளையாட்டு வீரர்கள் பங்குபெற்றனர். இதில் 2கே கிட்ஸ் அணி முதல் பரிசையும், அய்யம்பட்டியைச் சேர்ந்த அணி 2ம் பரிசையும், வெள்ளமரத்துப்பட்டி அணி 3ம் பரிசையும், பழையகோட்டை கிராமத்தைச் சேர்ந்த அணி 4ம் பரிசையும் தட்டிச் சென்றது. வெற்றி பெற்ற விளையாட்டு வீரர்களுக்கான பரிசளிப்பு விழா சுள்ளெறும்பு கிரிக்கெட் மைதானத்தில் நடைபெற்றது. விழாவிற்கு கிழக்கு மாவட்ட தி.மு.க. இளைஞரணி அமைப்பாளர் ம.கணேசன் தலைமை தாங்கினார்.

வடக்கு ஒன்றியச் செயலாளர் மணி, சுள்ளெறும்பு ஊராட்சி மன்ற முன்னாள் தலைவர் சின்னு என்ற முருகன், முன்னாள் ஒன்றிய துணைப் பெருந்தலைவர் ராஜேஸ்வரிதமிழ்ச்செல்வன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் ப.ராஜேஸ் பெருமாள் வரவேற்று பேசினார்.

விழாவில் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு பரிசுகளை மாவட்ட தி.மு.க. செயலாளர் ஐ.பி. செந்தில்குமார் வழங்கினார்.

நிகழ்ச்சியில் கிழக்கு மாவட்ட தி.மு.க. அவைத் தலைவர் வழக்கறிஞர் காமாட்சி, துணை செயலாளர்கள் ஆ.நாகராஜன், பிலால்உசேன், ரெட்டியார் சத்திரம் ஒன்றிய முன்னாள் பெருந்தலைவர் ப.க.சிவகுருசாமி, மாவட்ட மாணவரணி அமைப்பாளர் கே. அஸ்வின்பிரபாகரன், மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் பார்த்தசாரதி, முன்னாள் மாவட்ட ஊராட்சிக் குழு உறுப்பினர் சுப்புலட்சுமிசண்முகம், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர்கள் மணலூர் மணிகண்டன், கே.பி.என்.மாயக்கண்ணன், பேரூர்கழக செயாளர் ஸ்ரீராமபுரம் ராஜா, ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் கே.புதுக்கோட்டை ஏ.ஆர்.கே.ரமேஷ் மற்றும் கிளைக்கழக நிர்வாகிகள், முன்னாள் ஊராட்சி மன்ற உறுப்பினர்கள், ஒன்றிய குழு உள்ளிட்ட கழகத்தினர் உறுப்பினர்கள் பலர் கலந்து கொண்டனர்.



வேலூர் மாவட்டம் காட்பாடி 1வது மண்டலம் 6வது வட்ட தி.மு.க. சார்பில் கலைஞர் நூற்றாண்டு நிறைவு விழாவை முன்னிட்டு மாநகராட்சி துணை மேயர் எம்.சுனில்குமார் கழக கொடி ஏற்றி, கல்வெட்டு திறந்து வைத்து இனிப்பு மற்றும், பிரியாணி நலத்திட்ட உதவிகள் வழங்கினார். நிகழ்ச்சியில் வட்டக் கழகச் செயலாளர் சம்பந்தம் துணை செயலாளர் ஆர்.செந்தில்குமார், மாமன்ற உறுப்பினர் கே.ஜி.சீனிவாசன், பகுதி துணை செயலாளர் டி.பாண்டியன், இளைஞர் அணி அமைப்பாளர் கே.தரணி, அவைத்தலைவர் என். சிவராஜ், துணை செயலாளர் இ.சுரேஷ் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

---

# சர்வாதிகார ஜனநாயகத்தின் பிரதிநிதி ஆளுநர் ஆர்.என்.ரவி!

பொன். முத்துராமலிங்கம்
முன்னாள் அமைச்சர்,
கழக உயர்நிலை செயல் திட்டக்குழு உறுப்பினர்



தமிழ்நாடுசட்டப்பேரவையில்கடந்த9.1.2025 அன்று தமிழ்நாட்டின் முதல்வரால் முன்மொழியப்பட்டு, ஒருமனதாக சட்டப்பேரவையில் அடியில் குறிப்பிட்ட இந்தத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது.

“பல்கலைக்கழகங்களில் துணை வேந்தர்களை நியமிப்பது தொடர்பாக சமீபத்தில் பல்கலைக்கழக நிதி நல்கைக் குழு (University Grant Commission) வெளியிட்ட வரைவு நெறிமுறைகளைத் திரும்பப்பெற வேண்டுமென இப்பேரவை கருதுகிறது. அதேபோல் இளங்கலை, முதுகலைப் பட்டப்படிப்புகளில் கற்கை முறைகளுக்கான குறைந்தபட்ச வரைவு நெறிமுறைகள், 2024 மற்றும் பல்கலைக்கழகங்கள், கல்லூரிகளில் ஆசிரியர்கள், கல்விப் பணியாளர்கள் நியமனம் மற்றும் பதவி உயர்வு குறித்து வெளியிட்ட வரைவு நெறிமுறைகள்,2025 ஆகியன தேசிய கல்விக் கொள்கை,2020இன் அடிப்படையில் உருவாக்கப்பட்டுள்ளன.பல்கலைக்கழக நிதிநல்கைக் குழுவின் இத்தகைய நடவடிக்கைகள் இந்திய அரசமைப்புச் சட்டத்தின் அடிப்படைக்கோட்பாடான கூட்டாட்சித் தத்துவத்திற்கு எதிரானது மட்டுமல்ல; தமிழ்நாட்டின் உயர் கல்வி முறைக்கு பாதிப்பை ஏற்படுத்தக்கூடியதாகவும் அமைந்துள்ளது.

தமிழ்நாட்டில் சமூகநீதிக் கோட்பாட்டின் அடிப்படையில் உருவாக்கப்பட்ட வலுவான உயர் கல்விக் கட்டமைப்பை இந்த வரைவு நெறிமுறைகளைப் பாதிக்கும் வகையில் அமைந்துள்ளதாலும், தமிழ்நாடு இளைஞர்களின் எதிர்காலத்தை கடுமையாகப் பாதிக்கும் என்பதாலும் பல்கலைக்கழக நிதிநல்கைக் குழுவின் இந்த இரண்டு வரைவு நெறிமுறைகளையும், துணை வேந்தர் நியமனம் தொடர்பாக வெளியிடப்பட்டுள்ள வரைவு நெறிமுறைகளையும் உடனடியாகத் திரும்பப் பெற வேண்டும் என்று ஒன்றிய அரசின் கல்வித் துறையை இப்பேரவை ஒருமனதாக வலியுறுத்துகிறது.”

இந்தத் தீர்மானம் தொடர்பாக விளக்கமளித்து உரையாற்றிய முதல்வர் அவர்கள் ஒன்றிய அரசுக்கு ஒரு வேண்டுகோளையும் விடுத்திருந்தார்.

ஒன்றிய அரசு இந்தத் தீர்மானத்தினுடைய உண்மைகளை தெளிவாகப் புரிந்து கொண்டு மனம் மாறாவிட்டால், மக்களாட்சியின் நெறிமுறைப்படி மக்கள் மன்றத்தையும், நீதி மன்றத்தையும் நாடுவோம் என்று குறிப்பிட்டுள்ளார்கள்.

மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட மாநில அரசின் அதிகாரங்களை, குடியரசுத் தலைவரால் நியமிக்கப்பட்ட (appointed) ஆளுநரிடம் ஒப்படைப்பு செய்வது மக்களாட்சி முறையில் ஒன்றிய பா.ஜ.க. அரசின் திட்டமிட்ட கேலிக்கூத்தான செயல் என்றுதான் கருதமுடியும். மக்களுக்கு கல்வி என்னும் அறிவொளி வழங்கிடும் அதிகாரம் மக்கள் பிரதிநிதிகளால் தேர்வுசெய்யப்பட்ட மாநில அரசிடம்தான் இருக்க வேண்டுமே அல்லாமல், குடியரசுத் தலைவரால் நியமிக்கப்பட்ட ஆளுநரிடம்தான் இருக்க வேண்டுமென்று ஒன்றிய பா.ஜ.க. அரசு கருதுவது எந்த வகையில் கூட்டாட்சி ஆட்சி முறைக்கு ஏற்புடைய நடவடிக்கையாக இருக்க முடியும்? மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட மாநில அரசுக்குதான் அந்த மாநில மக்களின் மொழி உணர்வுகளையும், வேறுபல தொடர்புடைய சூழ்நிலைகளையும் ஆய்ந்தறிந்து சட்டங்களையும், திட்டங்களையும் உருவாக்க முடியும். மாறாக, மாநிலங்களுடைய கல்வி தொடர்பான எதார்த்த நிலைமைகளைப் புரிந்து கொள்ள மறுக்கும் ஒன்றிய அரசின் மூலமாக சட்டங்களையும், திட்டங்களையும் உருவாக்கினால் எத்தகைய எதிர் விளைவுகளை உருவாக்கும் என்பதை இந்தத் தீர்மானங்கள் தெளிவாக உணர்த்துகிறது.

மாநில ஆளுநர்கள் பற்றிய விபரங்களும், அதிகாரங்களும் இந்திய அரசியல் சட்டத்தின் 152 வது பிரிவு தொடங்கி 164வது பிரிவு முடிய 13 பிரிவுகளில் தெளிவாகவும், தீர்க்கமாகவும் வரையறுக்கப்பட்டுள்ளது. தமிழ்நாட்டின் ஆளுநர் ஆர்.என். ரவி அரசியல் சட்டத்தினுடைய வரையறுக்கப்பட்ட அதிகாரங்களை மீறி பலமுறை முரண்பாடாக நடந்து கொண்டார் என்ற அவரது கடந்தகால நடைமுறைகளைப் பற்றி இனியும் விளக்கிட வேண்டிய அவசியமில்லை.

மாநில மக்களுடைய பெரும்பான்மை ஆதரவினைப் பெற்று சட்டமன்றத்தில் மக்களாட்சி முறையில் ஆட்சிப் பொறுப்பை ஏற்றிருக்கும் முதலமைச்சரும், அவருடைய அமைச்சரவையும் எடுக்கும் முடிவுகளுக்கு முரண்பாடாக செயல்படுவது மட்டுமல்லாமல், அவரின் ஒப்புதலுக்காக அனுப்பப்படுகின்ற கோப்புகளில் கையெழுத்திடாமல் காலம் தாழ்த்துவதுமான, ஆளுநரின் தொடர் செயல்பாடுகள் அவரின் உள்நோக்கத்தை வெளிப்படுத்துகிறது.

அரசியல் சட்டப்படி மாநிலத்தின் அமைச்சரவை எடுக்கும் கொள்கை முடிவுகளை ஆளுநர் மறுக்கக் கூடாது. அரசியல் சட்டம் ஆளுநருக்கு வழங்கியிருக்கும் அதிகாரங்கள் பற்றிய விபரங்கள் ஆளுநருக்கு மிக நன்றாகவே தெரியும். ஆனாலும், ஆளுநர் வேண்டுமென்றே முரண்பாடாகச் செயல்படுவதற்கு காரணம் எதுவெனில், ஒன்றிய ஆட்சிக் கட்சியான பா.ஜ.க., எதிரணியில் இடம்பெற்றுள்ள திராவிட முன்னேற்றக் கழகத்தின் “திராவிட மாடல்” ஆட்சி தமிழ்நாட்டில் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது என்பதுதான்.

எனவே, தமிழ்நாட்டில் நடைபெறும் திராவிட முன்னேற்றக் கழகத்தின் “திராவிட மாடல்” ஆட்சியின் சாதனைகளையும், மாநிலத்தின் வளர்ச்சிப் போக்கினையும் சீர்குலைக்க வேண்டுமென்ற ஒரே அரசியல் நோக்கத்தைத் தவிர வேறு அரசியல் சட்டத்தின் அடிப்படையிலோ, தார்மிக நியாயங்களின் அடிப்படையிலோ ஆளுநரின் முரண்பட்ட நடவடிக்கைகள் அமையவில்லை. ஒவ்வொரு ஆண்டின் தொடக்கத்திலும், ஆளுநர் உரையுடன் சட்டமன்ற நிகழ்ச்சிகள் தொடங்கும்.

அந்த முறைகளில் கிஞ்சிற்றும் மாறுபடாமல் தொடர்ந்து சட்டமன்றங்கள் பின்பற்றும் மரபுகளையொட்டி, இந்த ஆண்டும் சட்டமன்ற நிகழ்ச்சிகள் தொடங்கின என சட்டமன்றத்தின் சபாநாயகர் தெளிவுபடுத்தியுள்ளார். தமிழ்த்தாய் வாழ்த்துடன் நிகழ்ச்சிகள் தொடங்கும், தேசியகீதத்துடன் நிறைவு பெறும். ஆனால், ஆளுநர் ரவி மரபுகளையும், பழக்கவழக்கங்களையும் மீறி, தேசியகீதத்தை முதலில் பாட வேண்டும் என ஒரு முரண்பட்ட காரணத்தை சொல்லிவிட்டு, தமிழ்நாடு மக்களின் பிரதிநிதித்துவ மன்றமான சட்டமன்றத்தை விட்டு வெளியேறினார் என்பதைத் தான், தமிழ்நாடு முதல்வர், உயர்ந்த நாகரிகத்தோடு, ஆளுநரின் நடவடிக்கைகளை கண்டிக்கும் விதமாக இந்த முரண்பாடான நடவடிக்கை ‘சிறுபிள்ளைத்தன’மானது என்று குறிப்பிட்டார்.

இந்த நாகரிகமான முதல்வரின் கண்டனத்தை ஆளுநர் ரவி, தமிழ்நாடு முதல்வர் ஆணவமாக பேசுகிறார் என்று குறிப்பிடுகிறார். இதில் என்ன ஆணவம் இருக்கிறது என்று புரியவில்லை. ஆளுநர் ரவி நல்ல தமிழ் அறிந்தவர்களிடம் இது குறித்து விளக்கம் பெறுவது நல்லது. இந்திய அரசியல் சட்டத்தின்படிதான் ஒன்றிய அரசும், மாநில அரசுகளும் இயங்கிட வேண்டுமென்பது கட்டாயமாகும்.

இந்திய அரசியல் சட்டப்படி குடியரசுத் தலைவரால் நியமிக்கப்பட்ட ஆளுநரே மாநில அரசுகளின் சட்டப்படியான நடவடிக்கைகளுக்கும், தொன்றுதொட்டு பின்பற்றி வரும் சட்டமன்ற மரபுகளுக்கும், மாண்புகளுக்கும் முரண்பட்டு நடந்து கொள்வதன் மூலம் ஆளுநரே அரசியல் சட்டத்தின் வரைமுறைகளை மீறி வேண்டுமென்றே திட்டமிட்டுச் செயல்படுகிறார் என்றுதான் கருத முடியும். அப்படி ஆளுநர் செயல்படுவதற்கான உள்நோக்கமும் இருக்கிறது.

ஒன்றியத்தின் ஆட்சிப் பொறுப்பிலிருப்பது பாரதிய ஜனதாக் கட்சி, அந்தக் கட்சியின் அரசால் குடியரசுத் தலைவர் மூலம் நியமிக்கப்பட்டவர்தான் ஆளுநர் ரவி. எனவே, ஆளுநர் ரவி தன்னை நியமித்த ஒன்றிய அரசிற்கு பிரதிபலனாகச் செயலாற்றும் முறையில் இத்தகைய முரண்பட்ட செயல்களில் ஈடுபடுகிறார் என்றுதான் கருதமுடியும். இன்று தமிழ்நாடு மட்டுமல்ல; ஒன்றிய பா.ஜ.க. அரசுக்கு எதிராக உள்ள அரசியல் கட்சிகள் ஆட்சி புரியும் மாநிலங்களிலும் ஆளுநர்களின் செயல்பாடுகள் இதே போன்றுதான் உள்ளது. பல அரசியல் கட்சிகள் செயல்படக்கூடிய இந்திய ஒன்றியத்தில், ஒன்றியத்தில் ஆட்சி யமைக்கும் அரசியல் கட்சிதான் மாநிலங்களிலும் ஆட்சியமைக்கும் என்று அறுதியிட்டுக் கூறவியலாது.

தற்போது இந்திய ஒன்றியத்திலுள்ள நிலைமையைப் போல் இனியும் தொடரலாம், அல்லது மாறவும் செய்யலாம். மாநிலங்கள் ஒன்றிணைந்த ஒரு ஆட்சியில் அந்தந்த பகுதி மக்களின் சமூக, பொருளாதார, அரசியல் சூழ்நிலைகளுக்கு ஏற்ப மாற்றங்கள் உருவாகும் என்பது மக்களாட்சியில் இயல்பான ஒன்றுதான். கன்னியாகுமரியிலிருந்து, காஷ்மீர் வரையிலுள்ள புவியியல் அமைப்பில், மக்களின் வாழ்வியல் முறைகள் ஒரே மாதிரிதான் இருக்கும் என்று கருதவியலாது.

ஜனநாயகத்தில், அதிலும் குறிப்பாக பல்வேறு தேசிய இனங்களை உள்ளடக்கிய துணைக் கண்டத்தில் ஒரே அரசியல் கட்சிதான் எங்கும் வியாபித்திருக்க வேண்டும் என்பதும் மேலும், அந்தக் கட்சிதான் அனைத்து மாநிலங்களிலும், ஒன்றியத்திலும் ஆட்சிக்கு வரவேண்டுமென நினைப்பதும், இந்த நோக்கத்தை நிறைவேற்றுவதற்காக கல்வி போன்ற எல்லாத் துறைகளின் அதிகாரங்களையும் மத்தியில் குவிப்பதும், இந்த செயல்திட்டப் பணிகளுக்காக மாநில ஆளுநர்களை பயன்படுத்துவதும் பாசிச அரசியல் வழிமுறை என்றுதான் அரசியல் அறிஞர்கள் கருதுகிறார்கள். ஜனநாயகத்தில் இத்தகைய நிலைமைகள் வளர்ந்தால், அதிகாரங்கள் மத்தியில் குவிக்கப்பட்டால், அது இந்திய அரசியல் சட்டத்தின் நோக்கங்களையும், திட்டங்களையும் சிதறடித்து, ஜனநாயகத்தை திசை மாற்றிவிடும் என்பதில் ஐயமில்லை.

இது குறித்து இந்திய நாட்டின் தலைசிறந்த வழக்கறிஞரும், சட்டவிற்பனருமான செட்டல் வாட் (Setalvad) அவர்கள் கூறியது போல “சர்வாதிகார ஜனநாயகமாகிவிடும்” (Totalitarian democracy), (A Constitutional Miscellany written by V.R. Krishna Iyer page No : 41). இந்த சூழ்நிலைகள் தமிழ்நாட்டில் மட்டுமல்ல, இந்தியா முழுமைக்கும் வரக்கூடாது. அது இந்திய ஒற்றுமையை சீர்குலைத்துவிடும் என்ற உயரிய சிந்தனையில்தான் தமிழ்நாட்டின் முதல்வர் ஒன்றிய அரசு உடனடியாக நடவடிக்கை மேற்கொண்டு, அனைத்து முரண்பட்ட நடவடிக்கைகளையும் குறிப்பாக, கல்வித் துறையில் நடவடிக்கைகளை மேற்கொள்ளவில்லையானால் ஜனநாயகக் கோட்பாட்டின்படி நீதிமன்றத்தை நாடுவோம் – இறுதித் தீர்ப்பாக மக்கள் மன்றத்தையும் நாடுவோம் என்ற தமிழ்நாடு முதலமைச்சரின் இந்தக் குரல், விரைவில் இந்தியா முழுமையும் தொடர் முழக்கங்களாக எதிரொலிக்கும் என்பது உறுதி.